இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 01-05-2025

# காக்கும் காவல் அரண் முதல்வர்!

தமிழ்நாடு சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கைக்கு பதில் அளித்து உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருமையான ஒரு வாதத்தை வைத்தார்கள்.

"தமிழ்நாடு எந்தெந்த வகையில் எல்லாம் வளர்ந்திருக்கிறது - தங்கள் துறை எவ்வளவு வளர்ந்துள்ளது என்பதை - ஒவ்வொரு அமைச்சர்களும் பெருமையோடு குறிப்பிட்டார்கள். அவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். உங்கள் துறையை வளர்தெடுத்தது - உங்கள் திறமையாக இருந்தாலும் - இந்த வளர்ச்சிக்கு அடிப்படையான முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறது. அதுதான் மாநிலத்தின் அமைதி ஆகும். அமைதியான மாநிலத்தில்தான் தொழில் வளரும். தொழிற்சாலைகள் வரும். கல்வி மேம்படும். பெண்கள் வளர்ச்சி ஏற்படும். இளைஞர்கள் முன்னேற்றம் ஏற்படும். விளையாட்டுத் துறை மேம்படும். உற்பத்தி அதிகம் ஆகும். ஏற்றுமதி அதிகம் ஆகும். சுற்றுலா வளரும். புதிய புதிய மேம்பாட்டைப் பார்க்கலாம். அமைதி இல்லாத - சட்டம் ஒழுங்கு சரியில்லாத மாநிலத்தில் இத்தகைய வளர்ச்சியை நாம் பார்க்க முடியாது. அனைத்து விதமான வளர்ச்சியையும் தமிழ்நாடு அடைய அமைதிமிகு மாநிலமாக தமிழ்நாடு இருந்ததுதான் காரணம். சட்டம் ஒழுங்கு சீராக இருந்தது தான் காரணம்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**ஒரு மாநிலத்தின் நல்லாட்சிக்கு இலக்கணம் என்பது அந்த மாநிலத்தின் அமைதிதான். தமிழ்நாட்டில் சாதிச் சண்டைகள் இல்லை. மதக் கலவரங்கள் இல்லை. பெரும் கலவரங்கள் இல்லை. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின் - ஒரு குறிப்பிட்ட ஊரின் உள் அமைதியைக் கெடுக்கும் செயல்கள் ஏதுமில்லை. தொடர்ச்சியான அச்சுறுத்தல் இல்லை. தொடர் வன்முறை இல்லை. இவை இருந்தால்தான் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்று சொல்ல முடியும். இவை எதுவும் இல்லை, இல்லை, இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு சட்டம் ஒழுங்கு சீராக இருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சரின் மிகச் சிறந்த கவனமான நிர்வாகம்தான் இதற்குக் காரணம்.**

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று ஒன்றிய அரசே சொல்லி இருக்கிறது. ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் சார்பில் சட்டம் - ஒழுங்கு பற்றிய ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன் சார்பில் மாதம் தோறும் தரவரிசை செய்யப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. அதன்படி 10-07-2024 இன் அறிக்கை வெளியாகி உள்ளது. இந்தத் தரவு அடிப்படையில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ள மாநிலங்களில், இந்திய அளவில் தமிழ்நாடுதான் முதல் இடத்தில் உள்ளது.

அதாவது 95.47 புள்ளிகளைப் பெற்று சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு முத்திரை பதித்துள்ளது. 2வது இடத்தை 93.96 புள்ளிகளைப் பெற்று மிசோரம் பிடித்துள்ளது. 3வது இடத்தில் தெலுங்கானா உள்ளது. அதாவது 91.86 புள்ளிகளைப் பெற்றுள்ளது இந்த மாநிலம். உத்தரப்பிரதேசம் 91.00 புள்ளிகள் பெற்றும் 4வது இடத்தில் இருக்கின்றது. கடந்த 30 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆண்டு வரும் குஜராத் மாநிலம் இந்தப் பட்டியலில் 80.46 புள்ளிகள் பெற்று 10ஆவது இடத்தில் உள்ளது.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்பது ஒன்றிய அரசே ஒப்புக் கொண்ட உண்மையாகும்.

2017-2020 ஆம் ஆண்டில், கொலை வழக்குகள் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரித்து வந்தது. 2024 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன. காவல்துறை எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால், கடந்த 6 ஆண்டுகளில் மிகக் குறைந்த ரவுடி கொலைகள் பதிவாகியுள்ளன. சாதி மற்றும் பழிவாங்கும் நோக்கம் கொண்ட கொலைகள் குறைந்துள்ளன. இந்திய அளவில் கொலைகளுக்கான குற்ற விகிதம் 2.2 ஆகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 2024 ஆம் ஆண்டிற்கான கொலைகளுக்கான குற்ற விகிதம் 1.9 மட்டுமே.

**காவல்துறையினர் மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக, 2023 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கொலைகள், காய வழக்குகள் குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளன. சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளில் காவல்துறை சுதந்திரமாகச் செயல்பட்டு, குற்றவாளிகள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

பொதுமக்கள் அதிகளவில் கூடும் திருவிழாக்கள் அனைத்தும் அமைதியாக நடந்துள்ளது. பல்வேறு சமூகத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களாக இருந்தாலும், கோவில் திருவிழாக்களாக இருந்தாலும் அமைதியாக நடந்துள்ளது. சர்ச்சைக்குரிய நாட்களை அமைதியாகக் கடந்திருக்கிறோம். பிரச்சினைகள் இல்லாமல் வைத்திருக்கிறோம். வகுப்புவாதம், மத அடிப்படைவாதம், சாதியவாதம் ஆகியவை வன்முறைக்கு அடித்தளம் இடுவதை முற்றிலுமாகத் தடுத்திருக்கிறார் முதலமைச்சர்.

**போதைப்பொருட்கள், தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், மாநிலங்களுக்கிடையேயான குற்றச் செயல்கள் இணையவழிக் குற்றங்கள் ஆகியவற்றை கடுமையாக ஒடுக்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். போதை மருந்து விற்பனையாளர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டு வருகின்றன.**

**"குற்றங்களைக் குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல் குற்றங்களைத் தடுக்கும் துறையாகச் செயல்பட வேண்டும்" என்று முதலமைச்சர் கட்டளையிட்டதால்தான் தமிழ்நாடு பாதுகாப்பான மாநிலமாக இருக்கிறது. அதனால்தான் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வளர்கிறது.**

செப்டம்பர் -6 காவலர் நாள் என்று அறிவித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். இது காவல் அரசு ஆகும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.4.2025) சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இளங்கோ அவர்களின் மகள் ராகவி இளங்கோ – ஏ.கே. சச்சிந்தர் ஆகியோரது திருமண உறுதியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஈட்டிய விடுப்பு சரண் - அகவிலைப் படி உயர்வு உள்ளிட்ட 9 அறிவிப்புகளை வெளியிட்ட

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் நன்றி!

## நேரில் சந்தித்து தெரிவித்துக் கொண்டனர்!

**சென்னை, மே 1 -**

**அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் கருதி ஈட்டிய விடுப்பு சரண், அகவிலைப்படி உயர்வு உள்ளிட்ட ஒன்பது அறிவிப்புகளை அறிவித்தமைக்காக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றத்திலிருந்து எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களும், பல்வேறு துறைகளில் திட்டப் பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அரசு நலத்திட்டங்கள் அனைத்து மக்களையும் சென்றடைய தங்களது உழைப்பும் பங்களிப்பையும் அளித்து வரும் அரசு ஊழியர்களின் நலன் காத்திட இவ்வரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசுத் துறைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் உள்ளிட்ட தேர்வு முகமைகள் வாயிலாகவும், கருணை அடிப்படையிலும் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை ஏற்று, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 28.4.2025 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி 110ன் கீழ் ஒன்பது அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அதன் விவரங்கள்.

**முதல் அறிவிப்பு :** அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, ஈட்டிய விடுப்பு நாட்களில், 15 நாட்கள் வரை 1.10.2025 முதல் சரண் செய்து பணப்பயன் பெறலாம் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பின்படி, சுமார் 8 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் பயன் பெறுவார்கள். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு 3 ஆயிரத்து 561 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**இரண்டாவது அறிவிப்பு:** 1.1.2025 முதல் அகவிலைப்படி 2 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்த அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இந்த உயர்வினை நடைமுறைப்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு 1252 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**மூன்றாவது அறிவிப்பு :** பண்டிகை கால முன்பணம் இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி அறிவித்தார். இதன்மூலம் ஆண்டுக்கு சுமார் 8 இலட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்.

**நான்காவது அறிவிப்பு :** அரசுப் பணியாளர்களுடைய குழந்தைகள் உயர்கல்வி பயில இந்த ஆண்டிலிருந்து தொழிற்கல்வி பயில ஒரு இலட்சம் ரூபாயாகவும், கலை மற்றும் அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் பயில ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

**ஐந்தாவது அறிவிப்பு :** அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திருமண முன்பணம் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

**ஆறாவது அறிவிப்பு :** தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட C மற்றும் D பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார். இதன் மூலம் சுமார் நான்கு இலட்சத்து எழுபத்து ஓராயிரம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். அரசிற்கு சுமார் 24 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**ஏழாவது அறிவிப்பு:** ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம் ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார். இதன் மூலம் சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் பத்து கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**எட்டாவது அறிவிப்பு :** அண்மையில், பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. பல்வேறு அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில், இந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை செப்டம்பர் மாதம் 30ம் தேதிக்குள் சமர்ப்பித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ஒன்பதாவது அறிவிப்பு :** திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு தற்போது உள்ள விதிகளின்படி மகப்பேறு விடுப்பு காலம் தகுதிகாண் பருவத்திற்கு (Probation period) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக அரசு பணிகளில் பணியாற்றி வரும் பல்லாயிரக்கணக்கான இளம் மகளிர் மகப்பேறு விடுப்பு எடுத்தால், தகுதிகாண் பருவம் உரிய காலத்திற்குள் முடிக்க இயலாமல் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணிமூப்பினை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது. இனிவரும் காலங்களில் அரசு பெண் ஊழியர்களின் மகப்பேறு விடுப்புக் காலத்தினை அவர்களது தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள இந்த ஒன்பது அறிவிப்புகளுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தும் வகையில் நேற்று (29.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தலைமைச் செயலக ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலக உதவியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கம், வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மையச் சங்கம், தமிழ்நாடு அனைத்து துறை நான்காம் பிரிவு ஓய்வூதியர்கள் சங்கம், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம், தமிழ்நாடு அரசு துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணி அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு அளவிலான நேரடி நியமன பள்ளி ஆய்வக உதவியாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

